



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில், மழை மற்றும் சூறைகாற்றினால் பாதிக்கப்பட்ட இடங்களை, இன்று (03.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, மேற்கொண்ட நிவாரண பணிகளை ஆய்வு செய்தார். கண்காணிப்பு அலுவலர்கள் திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., திருமதி ஜோதிநிர்மலா இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் ஆகியோர் உடனுள்ளார்கள்.

செ.வெ.எண்: 899/2017 நாள்: 03.12.2017

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில், மழை மற்றும் சூறைகாற்றினால் பாதிக்கப்பட்ட இடங்களை, கண்காணிப்பு அலுவலர்கள் திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., திருமதி ஜோதிநிர்மலா இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில், இன்று (03.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, மேற்கொண்ட நிவாரண பணிகளை ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில், மழை மற்றும் சூறைகாற்றினால் பாதிக்கப்பட்ட இடங்களை, கண்காணிப்பு அலுவலர்கள் திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., திருமதி ஜோதிநிர்மலா இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில், இன்று (03.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, மேற்கொண்ட நிவாரண பணிகளை ஆய்வு செய்தார்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தெரிசனங்கோப்பு, தடிக்காரன்கோணம், ஈசாந்திமங்கலம், அழகியபாண்டியபுரம் ஆகிய இடங்களில், மழை மற்றும் சூறைகாற்றினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள், வாழைமரங்கள், ரப்பர் மரங்கள் ஆகியவற்றை பார்வையிட்டார். பின்னர், நீரில் மூழ்கியிருந்த கிழங்கு செடிகளை பார்வையிட்டு, கணக்கெடுக்கும் பணிகள் குறித்து, சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர், மழை மற்றும் சூறைகாற்றினால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்து, அம்மாவின் அரசு, பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபர்களும், விடுபடாதவகையில், நிவாரண உதவிகள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில், 29.11.2017 அன்று பெய்த கனமழை மற்றும் சூறைகாற்றினால், பல்வேறு இடங்களில் உள்ள மரங்கள் முறிந்து விழுந்தது. இதனால், மின்கம்பங்கள் சேதம் ஏற்பட்டது. மின்கசிவினால் எந்தவொரு உயிர்சேதமும் ஏற்படாதவகையில், அம்மாவின் அரசு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 29.11.2017 அன்று மின்சாரம் நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும், பொதுமக்களுக்கு எந்தவொரு இடையூறு ஏற்படாதவகையில், வருவாய்த்துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள்துறை போன்ற பல்வேறு துறைகள் இணைந்து, சாலைகளில் விழுந்த மரங்களை அப்புறப்படுத்தினார்கள். மேலும், சேதங்கள் குறித்து கணக்கெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த கணக்கெடுக்கும் பணிகள் முடிவு பெற்றதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி இரா.ஜானகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.